**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், மாசி மாதம் 12 ம் நாள்

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் நாள் செவ்வாய்கிழமை

**இடைமனு எண்.6/2026**

**in**

**நிறைவேற்று மனு எண். 2/2024**

சுப்பிரமணியம்-ற்காக தனி அதிகார முகவர்

திருமதி.சரஸ்வதி, **... மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர்**

**// எதிர்//**

1. பொன்னுசாமி (இறந்துவிட்டார்)
2. ஈஸ்வரன்
3. பாலசுப்பிரமணியம்
4. நமோ கதிர்வேல்,
5. தங்கமுத்து (இறந்துவிட்டார்)
6. நாயகம்
7. ஈஸ்வரி
8. மஞ்சுளாதேவி
9. தனலட்சுமி
10. சுந்தராம்பாள்
11. ஈஸ்வரி
12. சரஸ்வதி **.... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்கள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.பூபதி, அவர்கள் ஆஜராகியும், 3 மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா அவர்கள் ஆஜராகியும், 7 மற்றும் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.K.பிரபுராம் அவர்கள் ஆஜராகியும், 10 முதல் 12ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சக்திவேல், அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட படியும், 2, 6 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாகியும் இந்நீதிமன்றத்தில் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 3 விதி 2 மற்றும் பிரிவு 151 ன் கீழ் மனுதாரரின் பொது அதிகார முகவராக திருமதி.சரஸ்வதியை நியமிக்குமாறு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1). மனுவின் சுருக்கம்:-**

1.1). மனுதாரர்/தீர்ப்பானை பெற்றவர் சுப்பிரமணியம் அவர்கள் மனுதாரரின் கணவர் ஆவார். மேற்படி நிறைவேற்று மனுவை மனுதாரரின் கணவர் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக, அசல் வழக்கு எண்.102/1998 ல் கணம் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மதிக்காமல் அவமதிப்பு செய்த எதிர்மனுதாரர்களை சிவில் சிறையில் அடைத்து உத்திரவு பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்.

1.2). மேற்படி நிறைவேற்றுமனு நிலுவையில் உள்ள இந்த சமயத்தில் மேற்படி மனுதாரரின் கணவர் சுப்பிரமணியம் அவர்களுக்கு கடந்த 23.05.2025 தேதிமுதல் சிறுநீரக செயலிழப்பு, கால்களில் வீக்கம், மூச்சுத்திணறல், மயக்கம், இருதயத்துடிப்பில் வேறுபாடு உள்ளிட்ட உடல்நலக் கோளாறால் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகியுள்ள்ளார். எனவே மருத்துவரின் பரிந்துரையின்பேரில் வாரம் இரண்டுமுறை Hemo Dialysis (ரத்த சுத்திகரிப்பு) செய்து வருகிறார், அவ்வப்போது ரத்த அழுத்தத்தில் மிகுந்த மாறுபாடு ஏற்பட்டு அவருக்கு மிகுந்த உடல்நலக்குறைவு ஏற்பட்டு அதனால் அவதிப்படுகிறார். அவரது மருத்துவ அறிக்கை மற்றும் Hemo

Dialysis (ரத்த சுத்திகரிப்பு) ரசீதுகள் ஆகியவற்றை இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ளார். அதனையும் இந்த பிரமான வாக்குமூலத்தின் ஒரு அங்கமாக பாவிக்க வேண்டுகிறார்.

1.3). மேற்படி மனுதாரரின் கணவர் தற்போது நடமாட முடியாமல் படுக்கையாக உள்ளார். இந்நிலையில் 24.10.2025 தேதியில் மேற்படி வழக்கு மற்றும் இதர வழக்குகளில் மனுதாரரை அவரது தனி அதிகார முகவராக நியமித்து ஒரு நோட்டரி வழக்கறிஞர் சான்றிட்ட தனி அதிகார ஆவணம் ஒன்றை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். மேற்படி தனி அதிகார ஆவணம் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்படி சுப்பிரமணியத்தின் தனி அதிகார முகவராக மனுதாரரை மேற்படி வழக்கில் நியமிப்பது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரரும், மனுதாரரது குடும்பத்தாரும் பெருத்த கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக நேரிடும். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

<u>2). 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையை 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் குறிப்பாணை தாக்கல் செய்து எதிருரையாக ஏற்றுகொண்டதன் சுருக்கம் :-</u>

2.1). மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் இந்த எதிர்மனுதாரர்கள் ஒப்புக் கொள்வதைத் தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானதும், பொய்யான சங்கதிகளை கொண்டுள்ளது. மனுவில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளையும் நிரூபிக்க வேண்டியது மனுதாரரின் பொறுப்பேயாகும்.

2.2). இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சியாக ஏற்கனவே அவரது மனைவி சரஸ்வதியை விசாரணை செய்துள்ள நிலையில், தற்போது உள்ள ஆவணங்கள் அல்லாமல் பழைய மருத்துவ ஆவணங்களைக் கொண்டு மேற்படி மனுதாரருக்கு பதிலாக தனது மனைவி சரஸ்வதியை பொது அதிகார முகவராக நியமிக்க மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். மேலும் மனுதாரர் தாக்கல்

செய்துள்ள மருத்துவ ஆவணத் தேதிக்கு பின்னிட்டும் இதர வழக்குகளில் ஷை மனுதாரர் நல்ல நிலையல் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். அவர் தற்பொழுது நல்ல நிலையிலும் நீதிமன்றத்தில் ஆஜராகும் நிலையிலும்தான் உள்ளார் இருப்பினும் பழைய மருத்துவ ஆவணங்களைக் கொண்டு அவர் வேண்டுமென்றே இம்மனுவினை தாக்கல் செய்து வீண் காலதாமதம் ஏற்படுத்தி வருகிறார். மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. நிறைவேற்று மனு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு எண்.102/1998 ல் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு கீழ்படியாமல், மதிக்காமல், அவமதிப்பு செய்ததற்காக நீதிமன்ற அவமதிப்பு சட்டம் பிரிவு 2(b) மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 ன் கீழ் எதிர்மனுதாரர்களை சிவில் சிறையில் அடைக்க வேண்டும் என நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர் சரஸ்வதியை பொது அதிகார முகவராக நியமிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.1). மனுதாரர் தரப்பில் நிறைவேற்றுமனு நிலுவையில் உள்ள இந்த சமயத்தில் மேற்படி மனுதாரரின் கணவர் சுப்பிரமணியம் அவர்களுக்கு கடந்த 23.05.2025 தேதி முதல் சிறுநீரக செயலிழப்பு, கால்களில் வீக்கம், மூச்சுத்திணறல், மயக்கம், இருதயத்துடிப்பில் வேறுபாடு உள்ளிட்ட உடல்நலக் கோளாறால் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளதாகவும், மருத்துவரின் பரிந்துரையின்பேரில் வாரம்

இரண்டுமுறை Hemo Dialysis (ரத்த சுத்திகரிப்பு) செய்து வருவதாகவும், மேற்படி சுப்பிரமணியம் தற்போது நடமாட முடியாமல் படுக்கையாக உள்ளதாகவும், இந்நிலையில் நேற்று 24.10.2025 தேதியில் மேற்படி வழக்கு மற்றும் இதர வழக்குகளில் மனுதாரரின் கணவர் சுப்பிரமணியத்திற்கு தனி அதிகார முகவராக நியமிக்க வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

5.2). எதிர்மனுதாரர்கள் தரப்பில், இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சியாக ஏற்கனவே அவரது மனைவி சரஸ்வதியை விசாரணை செய்துள்ள நிலையில், தற்போது உள்ள ஆவணங்கள் அல்லாமல் பழைய மருத்துவ ஆவணங்களைக் கொண்டு மேற்படி மனுதாரருக்கு பதிலாக தனது மனைவி சரஸ்வதியை பொது அதிகார முகவராக நியமிக்க மேற்படி மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

5.3). இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதை பரிசீலனை செய்கையில் மனுதாரரின் கணவர் சுப்பிரமணியம் சிறுநீரக செயலிழப்பு, கால்களில் வீக்கம், மூச்சுத்திணறல், மயக்கம், இருதயத்துடிப்பில் வேறுபாடு உள்ளிட்ட உடல்நலக் கோளாறால் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளதால், மருத்துவரின் பரிந்துரையின்பேரில் வாரம் இரண்டுமுறை Hemo Dialysis (ரத்த சுத்திகரிப்பு) செய்து வருவதால் நடமாட முடியாமல் படுக்கையாக உள்ளார் என சொல்லியுள்ளார். ஆனால் அதற்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

5.4). **உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 3 விதி 2 ன் கீழ்**

> **"அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் தரப்பினர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களில் எவர் மூலமாக, அத்தகைய முன்னிலையாதல்கள், விண்ணப்பங்கள் அல்லது செய்கைகள் செய்யப்படலாமோ அல்லது புரியப்படலாமோ அவர்கள், (அ) அத்தகைய தரப்பினர்கள் சார்பாக அத்தகைய முன்னிலையாதல்கள், விண்ணப்பங்கள் மற்றும்**

**செய்கைகள் செய்யவும், புரியவும் அதிகாரமளிக்ககிற அதிகாரப் பத்திரம் கொண்டுள்ள நபர்களாவார்கள்** ” என கண்டுள்ளது.

மேற்படி சட்டப்பிரிவுகளின் படி மனுதாரருக்கு அவரது கணவர் சுப்பிரமணியம் பொது அதிகார ஆவணம் வழங்கியுள்ளார். மேற்படி பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் மனுதாரருக்கு இந்த வழக்கை தொடர்ந்து நடத்தவும், சாட்சியம் அளிக்கவும் அதிகாரம் வழக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் சொல்லப்பட்டதை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**சூலூர்.**

Draft/ Fair Order
E.A.No.6/2026
E.P.No.2/2024
Dated:24.02.2026
DMC, Sulur